OS 166/2020

பி.வா.சா. 1 திரு. உதயகுமார் த/பெ. அர்ஜுனன்

நாள்; 17.03.2026

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் , சுந்தர்ராஜ் என்பவர் மூலம் எனக்கு வாதி பழக்கம். கடந்த 2019ம் ஆண்டு வட்டிக்கு பணம் ரூ.4 இலட்சம் கேட்டேன். 4 லட்சம் ரூபாய் வாங்கினேனா என்றால் வாங்கினேன். 4லட்சம் கடனுக்கு என்ன எழுதிக்கொடுத்தேன் என்றால் எனது சொத்தை அடமானத்துக்கு எழுதிக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 21.08.2019ல் ரூ. 4 லட்சம் வாங்கினேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்தேன் என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.1 ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் , எனக்கு படிக்க தெரியாது. பதிவு செய்தபோதே ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் அந்ததேதியில் ஆளை வைத்து படித்துப்பார்த்துதான் கையெழுத்து போட்டேன். கையெழுத்தை நான் ஆங்கிலத்தில் போட்டுள்ளேன். எனக்கு எழுதப்படிக்க தெரியும் என்றால் தெரியாது. மேற்படி தொகைக்கு வட்டி கொடுத்திருக்கிறேனா என்றால் மாதாமாதம் வட்டி கொடுத்திருக்கிறேன். என்னுடைய வாக்குமூலத்தில் என்ன தேதியில் எவ்வளவு வட்டி கொடுத்தேன் என்ற விவரம் சொல்லியிருக்கிறேனா என்றால் எனக்கு தெரியவில்லை.

3. நான் வட்டிபணம் கொடுத்திருக்கிறேன் என்று என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சாட்சி தற்போது எனக்கு தெரியவில்லை என்று கூறுகிறார். வட்டிக்கொடுப்பதாக வாதியை ஏமாற்றுவதற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு 2020ஆம் வருடம் தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரம் தெரியும என்றல் தெரியும். நீதிமன்ற அழைப்பாணை வந்தபிறகு வழக்கறிஞர் மூலம் நான் ஆஜராகியிருந்தேன் என்றால் சரிதான். 21.03.2023ஆம் வருடம் எனக்கு எதிராக ஒரு தலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மீதி கிரையப்பணம் ரூ.50,000/-த்தை வாதிநீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் , தெரியாது. கிரையப்பத்திரம் எழுதிபெறுவதற்காக தாக்கல் செய்திருந்த EP.No.126/2024 என்ற மனுவில் எனக்கு அறிவிப்பு வந்ததா என்றால் எனக்கு தெரியவில்லை. இந்த அறிவிப்பு வந்தபிறகு நான் வழக்கறிஞர் வைத்திருந்தேனா என்றால் வைத்திருந்தேன். அதன்பிறகதான் தீர்ப்பாணையை இரத்து செய்ய மனுசெய்தேன் என்றால் சரிதான். அந்த மனு ரூ.2000/- செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான்.

4. அசல் பத்திரத்தை கிரைய ஒப்பந்தம் எழுதும்போது நான் வாதியிடம் கொடுத்திருக்கிறேன். நான் வட்டி செலுத்தியதற்கான ஆதாரம் எதுவும் இல்லை என்றால் ஆமாம் இல்லை. வா.சா.ஆ.2 அறிவிப்பு எனக்கு வந்ததா என்றால் எனக்கு தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 அஞ்சல் ஒப்புகையில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அறிவிப்பை பெற்றுக்கொண்டபிறகு பதில் கொடுத்தேனா என்றால் பதில் கொடுத்திருக்கிறேன். பதில்அறிவிப்பை வழக்கறிஞர் மனோகரன் என்பவர் மூலம் கொடுத்திருக்கிறேன். அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிறகு எவ்வளவு நாட்கள் கழித்து பதில் கொடுத்தேன் என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த பதில் அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன்.

5. பதில்அறிவிப்பை நான் கொடுக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. காலம் கடத்தவேண்டும் என்பதற்காக தவறாக எதிர்வழக்கை நடத்துக்கிறேன் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் 96 செண்டுக்கு கொடுத்திருக்கிறேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கான ஒரு செண்டுக்கு கிரைய ஒப்பந்த தேதியில் எவ்வளவு என்று என்னால் சொல்லமுடியுமாஎன்றால் தெரியவில்லை. தாவா சொத்திற்கு கிரைய ஒப்பந்தம் எழுதியபோது உரிய மதிப்பு குறிப்பிடப்பட்டிருந்ததால்தான் கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டது என்றால் மதிப்பு எனக்கு தெரியவில்லை. அடமான பத்திரம் இல்லை என்று தெரிந்தபிறகு தாவா கிரைய ஒப்பந்தத்தை நான் ஆட்சேபனை செய்தேனா என்றால் முதலில் கிரையமான எழுதினார், நான் மறுத்துவிட்டேன். அதன்பிறகு கிரைய ஒப்பந்தமாக எழுதப்பட்டது. வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதும்போது நான் ஆட்சேபனை செய்தேனா என்றால் இல்லை. தம்பி நீ பணத்தை திருப்பி கொடுத்துவிட்டால் இரத்து செய்துவிடுவேன் என்று சொன்னதால் நான் கையெழுத்துப்போட்டேன். பணத்தை நான் திருப்பிக்கொடுத்தேனா என்றால் வட்டி மட்டும்தான் கொடுத்தேன். அசலை கொடுக்கவில்லை. வட்டி கொடுத்ததற்கு ஆதாரம் இருக்கிறதா என்றால் இல்லை.கிரைய ஒப்பந்தமாக எழுதிக்கொடுத்ததால் வாதியிடம்நான் வட்டி செலுத்தவில்லை என்றால் சரியல்ல.

6. கிரைய பத்திரம் இரத்து செய்து ஒப்படைத்ததாக விவரம் சொல்லியிருக்கிறேன். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. வாதியை ஏமாற்றி பணம் பெற்றுக்கொண்டு கிரையம் செய்துகொடுக்காமல் ஏமாற்றி வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா செலவுத்தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.